**கவனிக்க.**- 2017.10.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2041 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13**

*2041 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1586 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1587 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | நானாவித அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.**- (i) உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம் 2017 செத்தெம்பர் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்ட மூலம் 2017 ஒற்றோபர் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்ட மூலம் 2017 ஒற்றோபர் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

## வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

*திருத்தம்*

**பேருவளை நகர சபை**

பேருவளை நகர சபையில் உள்ள பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யும்
அறிவித்தலை திருத்தம் செய்தல்

*2017.09.22 ஆந் திகதிய 2038 ஆம் இலக்க பகுதி IV (ஆ) வர்த்தமானியில் பேருவளை நகர சபையில் பதவி வெற்றிடத்திற்கான உள்ளக மற்றும் வெளியக (வரையறுக்கப்பட்ட) ஆட்சேர்த்தல் அறிவித்தலின் விண்ணப்பப் படிவத்தில் நிறுவனத் தலைவரின் அனுமதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படும் என்பதை அறிவிக்கிறேன்.*

*(உள்ளக/ வெளியக ( வரையறுக்கப்பட்ட) ஆட்சேர்த்தலுக்கான விண்ணப்பப் படிவத்தின் இறுதித் திகதி 2017.10.31 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகிறேன்.*

*பீ. டீ. ஏ. கே. கயந்தி,*
*செயலாளர் மற்றும் காரிய கர்த்தாக்களை*
*அமுல்படுத்தும் அதிகாரமுள்ள அதிகாரி*
*பேருவளை நகர சபை.*

*நிறுவனத் தலைவரின் சான்றிதழ்*

*01. இவ் விண்ணப்பதாரியான திரு./ திருமதி ..................................................... இந்நகர சபையில் தற்போது சேவையில் உள்ளவரெனவும்*

*02. அவர் நிரந்தரப் பதவியில் உள்ளவராகவும்*

*03. நிரந்தரப் பதவியொன்றின் சேவையில் நிரந்தரமாக்கி கடிதமொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும்.*

*04. அவர் வர்த்தமானி அறிவித்தலின் திகதிக்கு அல்லது அதற்கு முன் 5 வருட திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்துள்ளதாகவும்,*

*05. அவருடைய சேவை மற்றும் நடவடிக்கைகள் வர்த்தமானி அறிவித்தலின் 05 வருடம் பூர்த்தியாகும் திகதியினுள் திருப்திகரமாக அமைந்துள்ளதாகவும்,*

*06. இப்பரீட்சையின் பெறுபேறுக்கமைவாக பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதையும்,*

*07. இப்பரீட்சைக்குரிய பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய இப்பரீட்சைக்கு அமர்வதற்கு அவர் தகுதியானவர் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.*

....................................
*நிறுவனத் தலைவரின் கையொப்பம்*

*10-356*

திருத்தம்

## நவகத்தேகம பிரதேச சபையின் பதவி வெற்றிட விண்ணப்பத்தின் இறுதித் திகதியினை நீடித்தல்

*2017.09.29 ஆந் திகதிய 2039 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நவகத்தேகம பிரதேச சபையில் வெற்றிடமாகி உள்ள ஆரம்ப தொழில்நுட்பமற்ற சேவை III தரத்தில் வேலை களத் தொழிலாளர் பதவிக்கு தகைமையுடையவரை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் கோரும் இறுதித் திகதி 2017.10.20 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*எச். எம். எஸ். ஹேரத்,*
*செயலாளர்,*
*நவகத்தேகம பிரதேச சபை.*

*பிரதேச சபை,*
*நவகத்தேகம,*
*2017, ஒற்றோபர் 02.*

*10-524*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பதுளை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் படி நிலுவை வரிப்பணம் சேகரிப்பதற்கு நிகராக சொத்துக்கள் தடைசெய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட சொத்துக்களை மீட்டெடுக்காத பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்தில் 158(1) பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி பதுளை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிலுவை வரிப்பணம் செலுத்தாத நிலுவையாளர்களிடமிருந்து பெறப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை 163 ஆம் பிரிவின் படி 2017.10.11 ம் திகதி மு.ப.10.00 மணிக்கு பதுளை பிரதேச சபை வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலமிடப்படும் பொருட்களை பரிசோதனை செய்வதற்காக 2017.10.10 ஆந் திகதி மு.ப. 09.00 மணிமுதல் பி.ப. 4.00 வரை பிரதேச சபை அலுவலகத்தில் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*டீ. ஏ. தனபால,*
*செயலாளர் (வே. பா.)*
*பதுளை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பதுளை,*
*2017, செத்தெம்பர் 21.*

*ஏலத்தில் விடப்படும் பொருட்கள்*

| | | |
|---|---|---|
| 1. | பிடியுடனான பிலாஸ்டிக் கதிரை | 08 |
| 2. | மின்சதர விசிறி (நிறுத்துவது) | 01 |

*10-226*


**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)**

*வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களை கட்டமைந்த இடப்பிரதேசங்களை பிரகடனப்படுத்தல்.*

*1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லையினுள் அமைந்துள்ளதும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான கிராமங்களை கட்டமைந்த இடப்பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதென 2017 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 11 ஆம் இலக்க நிர்வாகக்கட்டளையின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேசசபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பிரதேசசபைகள் உருவாக்கப்படமுன் காங்கேசன்துறை பட்டின சபையாகவும், தெல்லிப்பளை, மல்லாகம், மயிலிட்டி ஆகியன கிராம சபைகள் என வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பிரதேசங்களை கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தல்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு அவற்றுக்குப் பதிலாக கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறு வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பிரதேசங்கள் கட்டமைந்த பிரதேசங்கள் என 2017.09.01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் மேற்படி சட்டத்தின் பிரகாரம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடராஜா திருலிங்கநாதன் ஆகிய நான் அங்கீகாரம் வழங்கி இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*நடராஜா திருலிங்கநாதன்,*
*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2017, செத்தெம்பர் 01.*


Ward Map of Valikamam North Pradeshiya Sabha - Jaffna District
Ref. No : NDC / 10 / 10
Sea
Valikamam East Pradeshiya Sabha
Valikamam South Pradeshiya Sabha
Valikamam South West Pradeshiya Sabha
Scale - 1:50,000

## வவுனியா நகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத்துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) உள்ளூராட்சி அதிகார சபைகளின் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வவுனியா நகர சபையால் கீழ் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

இராசையா தயாபரன்,
செயலாளர்,
வவுனியா நகர சபை.

*நகர சபை அலுவலகம்,
வவுனியா,
2017, யூன் 30.*

### 14 ஆம் இலக்க 2017.06.30 ஆந் திகதிய தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வட மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வட மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வட மாகாண சபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தகமானியின் 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 1-6 வரையானவற்றை வவுனியா மாவட்டத்தில் அமையப்பெற்ற வவுனியா நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 2017.03.24 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்துவதென வவுனியா நகர சபையின் 14 ஆம் இலக்க 2017.06.30 ஆந் திகதிய நிர்வாகக் கட்டளை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை வட மாகாண நகர சபைகளுக்கான துணை விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் வவுனியா நகர சபைப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணை விதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வவுனியா நகர சபை தீர்மானிக்கின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*10 - 314*

---

## மாத்தறை மா நகர சபை

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் இடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிர்வகித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகளுக்கான பெயரிடல் மத்தறை மாநகர சபையின் ஒருங்கிணைப்புக்கு ஏற்ப, வீதிகளின் பெயரிடல் தொடர்பாக பின்வருமாறு தீர்மாணித்துள்ளது.*

*மாத்தறை மாநகார சபையின் அதிகாரங்களை செயற்படுத்தும் கடமைகளை நிறைவேற்றும் மாத்தறை மாநகர சபை ஆணையாளர் சேணக்க பல்லியகுருகே ஆகிய நான் (252 ஆம் அத்தியாயமான) மா நகர சபை கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்கு பெயரிடல், சிலுவைகள் அமைத்தல். மற்றும் நிர்வகித்தல் சட்டத்தின் கீழ் தென் மாகாண முதலமைச்சர் அவர்களினால் வழங்கப்பட்ட அனுமதியின் படி கீழே குறித்த அட்டணையில் விபரரிக்கப்பட்டவாறு, தற்போதைய பெயரில் உள்ள வீதிகளுக்கு புதிய பெயரகள் இடப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

சேணக்கபல்லியகுருகே,
மா நகர ஆணையாளர்.

*மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை.*

**அட்டவணை**

| | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | மாாவட்டம் | வீதியின் தற்போதைய பெயர் | புதிதாக வைக்கப்பட்ட பெயர் | வீதி விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | மாத்தறை மா நகர சபை | மாத்தறை | ஹித்தட்டிய மேற்கு ஆரியஜோத்தி மாவத்தை இஸதீன் நகரம் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாம் குருக்கு வீதி | பர்சி அவனியூ | அரம்பம் :இலக்கம் 117 ஏ.ரீ.சிறிசேன இல்லம், ஆரியஜோதி மாவத்தை முடிவு :- சுநந்த வீதி இலக்கம் 117/24 என். கே. பாண்டிப்பெரும இல்லம் |

*10 - 335*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.